டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல் - 637002.

தமிழாய்வுத்துறை

# நாட்டார் வழக்காற்றியல்

தாள் குறியீடு : (23UTAFT1)

## தலைப்பு : அடிப்படை தமிழிலக்கணம்


தயாரிப்பு:

திருமதி சு.ஹேமலதா

உதவிப்பேராசிரியர்.

http://www.trinitycollegenkl.edu.in/

## தமிழ் இலக்கணம்

தமிழ் மொழி 'இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ்,' என மூன்று பிரிவுகளை உடையது. இவையே 'முத்தமிழ்' என அழைக்கப்படக் காரணமாக விளங்குகிறது. முன்னோர் முத்தமிழின் பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே இலக்கணம் அமைத்தனர். அகத்தியம் முத்தமிழுக்கும் உரிய இலக்கண நூல் என்பர். இருப்பினும், பொதுவாகத் தமிழ் இலக்கணம் என்பது இயற்றமிழ் இலக்கணத்தைக் குறிப்பதாயிற்று. செய்யுள், உரைநடை ஆகியவற்றின் தொகுதி இயற்றமிழாகும். தொல்காப்பியம் இயற்றமிழில் கிடைத்துள்ள மிகப்பழைய இலக்கண நூலாகும்..

# தமிழ் இலக்கணம்

ஐந்து வகை. அவை,

- **எழுத்து**
- **சொல்**
- **பொருள்**
- **யாப்பு**
- **அணி**

அறிஞர்கள் தமிழ் இலக்கணத்தை மூன்று வகை இலக்கணம் என்றும் ஆறு இலக்கணம் என்றும் ஏழு இலக்கணம் என்றும் வகைப்படுத்துவர்

# முதலெழுத்து

"எழுத்தெனப் படுவ அகர முதல னகர இறுவாய் முப்பஃ தென்ப“

— *தொல்காப்பியம்*

"உயிரும் உடம்புமாம் முப்பது முதலே“

— *நன்னூல்*

'அ' முதல் 'ஔ' வரையுள்ள 12 உயிரெழுத்துகளும், 'க்' முதல் 'ன்' வரையுள்ள 18 மெய்யெழுத்துகளும் ஆகிய முப்பதும் முதலெழுத்துகள் எனப்படும்

**உயிரெழுத்துகள்**: உயிரெழுத்துகள் 12 அவை

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ

**மெய்யெழுத்துகள்**: மெய்யெழுத்துகள் 18 அவை

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற்,ன்

உயிரெழுத்துகள் குறில், நெடில் என இரண்டு வகைப்படும்.

மெய்யெழுத்துகள் வல்லினம், மெல்லினம், இடையினம் என்று மூன்று வகைப்படும்.

# சார்பெழுத்துகள்

"சார்ந்து வரன் மரபின் மூன்று அலங்கடையே"
— *தொல்காப்பியம்*

"உயிர்மெய் ஆய்தம் உயிரள பொற்றள
ப ஃகிய இஉ ஐஔ மஃகான்
தனிநிலை பத்தும் சார்பெழுத் தாகும்"
— *நன்னூல்*

*சார்பெழுத்து*

சார்பு எழுத்து மூன்று என்பது மரபு என்கிறார் தொல்காப்பியர் அவை குற்றியலிகரம் குற்றியலுகரம் மற்றும் ஆய்தம்

ஆனால் பிற்காலத்தில் நன்னூலார் அதை விரிபடுத்தி :
உயிர்மெய் எழுத்து
ஆய்த எழுத்து
உயிரளபெடை
ஒற்றளபெடை
குற்றியலுகரம்
குற்றியலிகரம்
ஐகாரக் குறுக்கம்
ஔகாரக் குறுக்கம்
மகரக்குறுக்கம்
ஆய்தக்குறுக்கம்

எனச் சார்பெழுத்து பத்து வகைப்படும்

முதலெழுத்துகளைச் சார்ந்து வருவதாலும், முதலெழுத்து திரிபு, விகாரத்தால் பிறந்ததாலும் இவை சார்பெழுத்துகள் என அழைக்கப்படுகின்றன.

இவ்வாறு, உயிர் எழுத்துகள் 12, மெய் எழுத்துகள் 18 , உயிர்மெய் எழுத்துகள் (இவைகள் உயிர் மெய் இரண்டும் சார்ந்து வரல் ஆதலின் சார்பெழுத்து எனப்படும் 216), ஆய்தம் ஆகிய 247 எழுத்துகளே, தமிழ் எழுத்துகள் எனப்படும்.

# நன்றி

http://www.trinitycollegenkl.edu.in/